


சிவகங்கை மாவட்டம், குன்றக்குடி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைந்துள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் மணிமண்டபத்தில், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் 101–வது பிறந்த நாள் அரசு விழாவினை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி நேற்று (11.07.2025) குன்றக்குடி ஆதினம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பலம் அடிகளார் ஆகியோர் முன்னிலையில் அரசின் சார்பில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

# தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் தொய்வின்றி நடைபெற - ரூ 2.15 கோடிக்கான காசோலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜூலை 12-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.7.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணிகள் தொய்வின்றி நடைபெற 2 கோடியே 15 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.இராசேந்திரனிடம் வழங்கினார்.**

அனைத்து அறிவுத் துறைகளிலும் தமிழ் வளர்ச்சி காணவேண்டும் என்ற தலையாய நோக்கத்தோடு 1946-ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்வி அமைச்சராகத் திகழ்ந்த தி.சு.அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களால் தமிழ் வளர்ச்சிக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் உயர் குறிக்கோளாகிய கலைக் களஞ்சியத் திட்டத்தை தி.சு. அவினாசிலிங்கம் இந்திய விடுதலை நாளான 15.08.1947 அன்று அறிவித்தார். தமிழ் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அனைத்துத் தரப்பு மக்களும் அவருடைய இந்த அறிவிப்பை மெத்த மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் 20.10.1947-இல் கலைக்களஞ்சியப் பணி தொடங்கப் பெற்றது. அன்றைய துணைவேந்தர் முனைவர் ஆ.இலக்குமணசாமி தலைமையில் கலைக்களஞ்சிய உருவாக்கத்திற்கு 'அறிஞர் குழு' ஒன்று அமைக்கப்பட்டது.

பேராசிரியர் மு.வரதராசன், பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை, பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், டி.கே.சிதம்பரநாத முதலியார் ஆகியோர் இக்குழுவில் உறுப்பினர்களாக இடம்பெற்றனர். கல்கி ரா.கிருஷ்ண மூர்த்தியும் பேராசிரியர் கே.சுவாமிநாதனும் இக்குழுவின் செயலாளர்களாக நியமிக்கப் பெற்றனர். ம.ப.பெரியசாமித்தூரன் கலைக்களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்றார். சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்திற்குரிய இடத்தைத் தந்து உதவியது.

தமிழில் கலைக்களஞ்சியத்தைப் பத்துத் தொகுதிகளாக கொண்டுவர வேண்டு மென்று திட்டமிடப்பட்டது. ஒவ்வொரு தொகுதியும் ஏறத்தாழ 750 பக்கங்களைக் கொண்டதாகவும், பொதுமக்களுக்கும் விளங்கக் கூடிய நடையில், அறிவுத் துறைகள் அனைத்தையும் திறம்பட எடுத்துரைப்பதாகவும், பல்துறை அறிவு பற்றிய பதிவுகளை அகரவரிசைப்படுத்தி, அவற்றைக் கட்டுரை வடிவில் தெளிவாக விளக்குவதாகவும் அமைந்த சிறப்பானதோர் அறிவுக் கருவூலமாகக் கலைக்களஞ்சியத்தை உருவாக்க வேண்டும் என்றும் திட்டமிடப்பட்டது.

முதல் தொகுப்பு, அதன் பணி தொடங்கி 6 ஆண்டுகட்குப் பின் 1954 -இல், 742 பக்கங்களுடன் வெளிவந்தது. இதற்கு 207 அறிஞர்கள், அவரவர் நிபுணத்துவம் பெற்ற துறைகளில் கட்டுரைகள் வழங்கியுள்ளனர். பணி தொய்வின்றித் தொடர்ந்து நடந்தது.1968-இல் 10-ஆம் தொகுதி (இணைப்புத் தொகுதி) வெளியாயிற்று. இவற்றுள் 5-ஆவது தொகுதியை அன்றைய இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் வெளியிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இது கலைக்களஞ்சிய ஆக்கப்பணிக்குப் பெருமை சேர்த்தது.

இந்திய மொழிகளில் 10 தொகுதிகளைக் கொண்ட விரிவான கலைக்களஞ்சியம் தமிழில் தான் முதன் முதலாக வந்தது என்பது பெருமிதமான செயலாகும். இதைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆக்கபூர்வமான தமிழ்த் தொண்டாகும். இவற்றிற்கு 2240 அறிஞர்கள் பங்களிப்புச் செய்திருக்கின்றனர். தமிழ் வளர்ச்சிக்கழகம் வாயிலாக இதுவரை 60 நூல்கள், கலைக்களஞ்சியக் குறுந்தகடு ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன.

கன்னித் தமிழ், கணினித் தமிழாகிக் கொண்டிருக்கிறது. மென்தமிழ், மின் தமிழாகிக் கொண்டிருக்கிறது. மின் தமிழாகத் தமிழை முழுவதுமாக மாற்றினால், வரும் தலைமுறைகளுக்கு கருவிகளே தமிழைக் கற்றுக் கொடுக்கும். ஆகவே இப்போது செயற்கை நுண்ணறிவுக்கும் தமிழைக் கொண்டு சேர்க்கும் திட்டப் பணிகளைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளவும், தொடர்ந்து தொய்வின்றி செயல்படவும் உதவிடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 15.04.2025-ஆம் நாளன்று நடைபெற்ற தமிழ் வளர்ச்சித் துறையின் 2025-2026ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்களால் "தமிழ் வளர்ச்சிக் கழகம் தொய்வின்றி செயற்பட ரூபாய் 2 கோடி வைப்புத் தொகை வழங்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை செயற்படுத்திட, தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடர்ந்து தொய்வின்றி செயல்பட்டு தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையிலும் 2 கோடி ரூபாய் வைப்புநிதியாக வைத்து அதிலிருந்து வரும் வட்டித்தொகையை மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு தமிழ் வளர்ச்சிக் கழகம் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலும், 2 கோடியே 15 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.இராசேந்திரனிடம் வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர்

நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் வே.ராஜாராமன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் ஆர். பாலகிருஷ்ணன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் உடனிருந்தனர்.



கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதி, கீழ்பென்னாத்தூர் தெற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆவூர் ஊராட்சியில் ஓரணியில் தமிழ்நாடு தி.மு.க உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது. முகாமை துணை சாபாநாயகர் கு.பிச்சாண்டி நேரில் சென்று ஆய்வு செய்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் ஆராஞ்சி A.S.ஆறுமுகம், இரா.ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதி ஆவூர் ஜப்பார், ஒன்றிய துணை செயலாளர் இளம்பரிதி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஆவூர் சூர்யா மற்றும் கிளை கழக செயலாளர்கள், கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 72 அரசு உயர்நிலை - மேல்நிலைப் பள்ளிகளில்

# ரூ.99.35 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜூலை 12-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (11.7.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 72 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 99 கோடியே 35 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 403 வகுப்பறைகள், 54 கழிவறைகள், 13 ஆய்வகங்கள், 2 குடிநீர் வசதிகள் என 472 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தார்.**

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனிற்காக பள்ளிகளில் இணைய வசதி, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, தமிழகத்தின் கல்வித் தரத்தினை உயர்த்திட "இல்லம் தேடி கல்வி",

"நம் பள்ளி நம் பெருமை", "எண்ணும் எழுத்தும்", "நம்ம ஸ்கூல் பவுண்டேசன்", திறன் வகுப்பறைகள் அமைத்தல், உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகம் அமைத்தல், மாதிரி பள்ளிகளை உருவாக்குதல், பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு போன்ற சிறப்புத் திட்டங்களோடு, அனைத்து மாவட்டங்களிலும் புத்தக கண்காட்சி, சென்னை பன்னாட்டுப் புத்தகத் திருவிழா, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் மாபெரும் நூலகங்கள், மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா பாடநூல்கள் மற்றும் கல்வி உபகரணங்களை வழங்குதல் போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்களை இவ்வரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற கடந்த நான்கு ஆண்டு காலங்களில், ரூ.519.73 கோடி மதிப்பீட்டில் அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 8,209 உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (HiTech Lab), ரூ.455.32 கோடி செலவில் அரசுப் பள்ளிகளில் பயிலும் 16,77,043 மாணவர்கள் பயனடையும் வகையில் 22,931 திறன்மிகு வகுப்பறைகள் (Smart Classroom), ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு பள்ளி வீதம் ரூ.352.42 கோடி செலவில் 38 மாதிரிப் பள்ளிகள், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1,833.02 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகங்கள், குடிநீர் வசதிகள், கழிப்பறைகள் மற்றும் சுற்றுசுவர், என மொத்தம் 3160.49 கோடி ரூபாய் செலவிலான பள்ளிக்கல்வித் துறை கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது.

**திறந்து வைக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்களின் விவரங்கள்:-**

அந்த வகையில், கடலூர் மாவட்டம் - தாண்டவராயன்பட்டி, பாலூர், இந்திரா நகர், திண்டுக்கல் மாவட்டம் - நத்தம், பழனி, லிங்கவாடி, ஈரோடு மாவட்டம் - பொலவக்காளிபாளையம், அந்தியூர், சிக்கரசம்பாளையம், பி.மேட்டுப்பாளையம், கன்னியாகுமரி மாவட்டம் - ஆரல்வாய்மொழி, அம்மன் திவளை, ஆனக்குழி, வரியூர், கிருஷ்ணகிரி மாவட்டம் - சிங்காரப்பேட்டை, மயிலாடுதுறை மாவட்டம் - தோக்களக்குடி, அச்சல்புரம், வடகரை, கொடக்காரமூலை, குத்தாலம்;

நாகப்பட்டினம் மாவட்டம் - குருக்கத்தி, அம்பை, கோவில்குளம், ஆழியூர், வாழ்குடி, புதுக்கோட்டை மாவட்டம் - ஏம்பல், ஒத்தப்புளி குடியிருப்பு, பெருமாண்டு, கீரனூர், இராமநாதபுரம் மாவட்டம் - கோட்டைமேடு, இருமேனி, பேரையூர், இராணிப்பேட்டை மாவட்டம் - பனப்பாக்கம், ஜாகிர்தண்டலம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் - தாத்தையங்கார்பேட்டை, நீலகிரி மாவட்டம் - கூடலூர், தேனி மாவட்டம் - அல்லிநகரம், சிலமலை, திருவண்ணாமலை மாவட்டம் - நெடுங்குணம், தாணிப்பாடி, நவபாளையம், தண்டராம்பட்டு, தெள்ளார், அண்டம்பள்ளம், வேட்டாவலம், ஆவூர், வந்தவாசி, திருநெல்வேலி மாவட்டம் - களக்காடு,தூத்துக்குடி மாவட்டம் - ஏரல், கயத்தாறு;

விழுப்புரம் மாவட்டம் - செஞ்சி, கொட்டப்பூண்டி, தேவனூர், விருதுநகர் மாவட்டம் - இராஜபாளையம், விருதுநகர், என்.சுப்பையாபுரம், எம்.புதுப்பட்டி, ஆமத்தூர், மல்லாங்கிணறு, புதுசூரங்குடி, காரியாப்பட்டி, கல்லாமனைச் சன்பட்டி, சேவல்பட்டி, விஜயகரி சல்குளம்,வெம்பங்கோட்டை, பூவநாதபுரம், திருத் தங்கல், அவியூர், மஸ்தகுறிச்சி, சாலைமறைகுளம்;

ஆகிய 72 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் மொத்தம் 99 கோடியே 35 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 403 வகுப்பறைகள், 54 கழிவறைகள், 13 ஆய்வகங்கள், 2 குடிநீர் வசதிகள் என 472 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மருத்துவர் பி.சந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மரு. மா.ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் எஸ்.கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் ஊட்டச்சத்து மேலாண்மை திட்ட துவக்க விழாவினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ் நாடெங்கும் காணொலிக் காட்சி வாயிலாக துவக்கி வைத்தார்கள். இதன் தொடர்ச்சியாக நேற்று தஞ்சாவூர் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு காய்கறி விதைத் தொகுப்பு மற்றும் பழச் செடிகளின் தொகுப்பினை விவசாயிகளுக்கு டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் வேளாண்மை இணை இயக்குனர், துணை இயக்குனர், தோட்டக்கலை துணை இயக்குனர் மற்றும் விவசாயத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### மண் - மொழி - மானம் காக்க ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் சேர்க்கை பணிகளுக்காக

# திரு.வி.க. நகர் - வில்லிவாக்கம் தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர் பாபு அறிவிப்பு!

*சென்னை, ஜூலை.12-*

*சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு விடுத் துள்ள அறிக்கை வருமாறு:-*

*மதுரை மாநகரில் ஜூன் 1 அன்று நடைபெற்ற பொதுக்குழுவில் தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க கழகத் தலைவரால் எடுக்கப்பட்ட சிறப்பு தீர்மானமான ஓரணியில் தமிழ் நாடு உறுப்பினர் சேர்க்கை*



*பணிகளுக்காக திரு.வி.க. நகர்- வில்லிவாக்கம் ஆகிய இரு தொகுதிகளின் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (12.7.2025 - சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் சென்னை, ஓட்டேரி, எண்.7, செல்லப்பா தெரு என்ற முகவரியில் நடைபெறுகிறது.*

*இக்கூட்டத்தில் மேற்கண்ட இரு தொகுதிகளுக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள்,தொகுதி பார்வையாளர்கள், பகுதி கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர் பாபு தெரிவித்துள்ளார்.*



திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி கந்திலி ஒன்றியத்தில் மகளிர் பேருந்து துவக்கம், ஊராட்சிமன்ற அலுவலக கட்டிடத்தை ஏ. நல்லதம்பி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இதில் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.